[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2007 அக்டோபர் 18

இன்னும் ஒரு இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்றால், ரூ.40,000, 50,000 கொடுத்து ஒரு ஏக்கர் நிலம் வாங்க முடியும்.

நண்பகல் 12-00

அப்படி யாராவது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. அப்படிப் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு ஏக்கருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பணம் கொடுக்கச் சொல்லி, பக்கத்திலேயே ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலே ஒரு ஏக்கர் நிலம் 50 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிக்கொள்வதற்கு இந்த அரசு துணையாக இருக்கும்.

(உ) வேலூரிலே மின் தடையைப் போக்குதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலம் மின் உற்பத்தியிலே ஓரளவுக்குத் தன்னிறைவு பெற்ற மாநிலம் என்றுகூட இப்பொழுது அறிவித்தார்கள். இன்னும் கொஞ்ச நாளைக்கு முன்னால் பட்ஜெட் announcement-ல் பார்த்தோம் என்று சொன்னால் அப்போது உபரியாகவே நம்முடைய மாநிலத்தில் மின்சாரம் இருந்தது. இவ்வளவு உபரியாக மின்சாரம் இருக்கிற அல்லது தன்னிறைவு பெற்றிருக்கக்கூடிய இந்த தமிழகத்தில் எங்களுடைய வேலூர் பகுதியிலே ஒரு நாளைக்கு 15 முறை current cut ஆகிறது. இப்படி current cut ஆகிறதை நான் அமைச்சருடைய கவனத்திற்குக்கூட கொண்டு வந்தேன். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுடைய வேலூர் பகுதியிலே எட்டு மணி நேரம் சில நேரங்களில் current இல்லாமல் போய் விடுகிறது ஒரு நாளைக்கு; அதற்காக மாண்புமிகு அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்? தொடர்ந்து மின்சாரத்தை வழங்கி எங்களுடைய பகுதியை அவர்கள் பாதிப்பு இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு துணை நிற்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

சத்துவாச்சாரியிலே ஒரு sub-station போட்டால்தான் current-ஐ நாங்கள் ஒழுங்காகக் கொடுக்க முடியும் என்று C.E. என்னிடம் தெரிவித்தார். அங்கே சத்துவாச்சாரியிலே sub-station போட வேண்டும் என்று சொன்னால், சத்துவாச்சாரியில் நகராட்சியினுடைய இடத்தைக்

2007 அக்டோபர் 18] [திரு. சி. ஞானசேகரன்]

கொடுப்பதற்கு முன்மொழிவினை ஏற்கெனவே அனுப்பி இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சென்னையில் இருக்கக்கூடிய நம்முடைய Commissioner of Municipal Administration-க்குச் சொல்லி, enter upon permission-ஐ உடனே கொடுத்துவிட்டால் ஒரு sub-station உடனடியாக வந்துவிடும். அதற்கான கட்டணத்தை மின் துறை கட்டிவிடுவதற்குத் தயாராக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடைய சத்துவாச்சாரி பகுதியிலே ஒரு sub-station அமைவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? தடையில்லாத மின்சாரத்தை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், அவர் இருக்கிற வேலூர் மாவட்டத்திலே அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது என்று சொன்னார். நான் ஏற்கெனவே காலையிலே கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே குறிப்பிட்டேன். எப்போதும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு அக்டோபர் திங்களில், காற்றின்மூலம் இந்த ஆண்டு கிடைக்கக்கூடிய மின்சாரமான 1600 மெகா வாட் உற்பத்தி திடீரென்று காற்று வீசாத காரணத்தினாலே பாதிக்கப்பட்டிருக்கிறது. நெய்வேலியிலே ஒரு அனல் மின் நிலையம் இயங்கவில்லை. தூத்துக்குடியிலே ஒரு அனல் மின் நிலையம் இயங்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தற்காலிகமாக 3, 4 நாட்களுக்கு இந்த நிலை நீடிக்கும். காற்று வீசவில்லையென்றால்கூட நெய்வேலி அனல் மின் நிலையத்தையும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தையும் உடனடியாக இயக்கச் செய்து எந்த இடத்திலேயும் மின்சாரத் தடை இல்லாத அளவுக்கு மின்சார இலாகா பார்த்துக்கொள்ளும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். Sub-station-ஐப் பற்றிச் சொன்னார். நிச்சயமாக எங்களுக்கு இடம் கொடுத்தால் sub-station கட்டுவதற்கு மின் வாரியம் தயாராக இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காற்று உங்கள் பக்கம் வீசுகிறது. இல்லையென்றால் ஐந்து தடவை பேசுவீர்களா?